**இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயம்**
**கண்டி**
******

**ஊடக வெளியீடு**

## இந்திய பிரதி உயர்ஸ்தானிகரின் மத்திய மாகாணத்திற்கான விஜயம்.

இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் திரு. வினோத் கே. ஜேக்கப் அவர்கள் 2022 நவம்பர் 23ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை மத்திய மாகாணத்தின் நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

2. நுவரெலியாவிலிருந்து தனது விஜயத்தை ஆரம்பித்த இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் ஹட்டனில் உள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு (TVTC) விஜயம் செய்து அங்குள்ள சிரேஷ்ட முகாமையாளர்களுடன் கலந்துரையாடினார். தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தை மேம்படுத்துவது இந்தியாவின் தற்போதைய அபிவிருத்தி திட்டங்களில் ஒன்றாகும். மேலும், பிரதி உயர்ஸ்தானிகர் டிக்கோயா ஆதார வைத்தியசாலையையும் பார்வையிட்டதோடு முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ முத்து சிவலிங்கம் அவர்களின் மறைவுக்கும் தனது இரங்கலை தெரிவித்தார்.

3. பிரதி உயர்ஸ்தானிகர் நவம்பர் 24ஆம் திகதி மத்திய மாகாணத்திற்கான கௌரவ ஆளுநர் திரு. லலித் யு. கமகே அவர்களைச் சந்தித்தார். கௌரவ ஆளுநர் அவர்கள் மத்திய மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு மேலதிகமாக சமீபத்திய நெருக்கடியை சமாளிக்க வழங்கிய உதவிகளுக்கும் இந்தியாவுக்கு தனது நன்றியை தெரிவித்தார். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள், வரலாற்று மற்றும் கலாச்சார தொடர்புகள் குறித்தும் இருவரும் தமது கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் அவர்கள் 2023ம் ஆண்டில் நடைபெறவுள்ள முக்கிய நிகழ்வுகளான இந்தியாவின் G20 மற்றும் SCO தலைமைத்துவம், இந்தியா மற்றும் இலங்கைக்கிடையிலான 75 ஆண்டுகால இருதரப்பு உறவுகள் மற்றும் கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயம் ஸ்தாபிக்கப்பட்டதன் நூற்றாண்டு நிறைவு போன்றவற்றை கௌரவ ஆளுநரிடம் எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து, இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் அவர்கள் கௌரவ தியவதன நிலமே கலாநிதி. பிரதீப் நிலங்க தேல அவர்களை சந்தித்ததோடு இந்திய அரசின் உதவியுடன் பல்லேகல, SIBA-வில் நிர்மாணிக்கப்பட்டுவரும் கண்டிய நடனக் கலைக்கூடத்திற்கு விஜயம் செய்து பணியின் முன்னேற்றம் குறித்து ஆய்வில் ஈடுபட்டார்.

4. நவம்பர் 25ஆம் திகதி, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் (UoP) 'சர்வதேச வாரம் 2022' இன் நிறைவு நிகழ்வாக இடம்பெற்ற கலாச்சார நிகழ்வை இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துக்கொண்டு ஆரம்பித்து வைத்தார். தனது ஆரம்ப உரையில்,

பகிரப்பட்ட விருப்புகளுடன் அண்டை நாடுகளாக, நமது கலாச்சார தொடர்புகளை மதித்து, பாதுகாப்பதோடு அதனை மேம்படுத்தல் வேண்டும் என்பதை பிரதி உயர்ஸ்தானிகர் வலியுறுத்தினார். இந்திய அரசியலமைப்பு தினத்தை கொண்டாடும் வகையில், இந்திய பிரதி உயர்ஸ்தானிகர், பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.டி. லமாவங்சவுடன் இணைந்து, பேராதனை பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகத்தில் 'இந்திய அரசியலமைப்பை உருவாக்குதல்'எனும் தலைப்பிலான புகைப்படக் கண்காட்சியொன்றை ஆரம்பித்து வைத்த அதேவேளை, இந்திய அரசியலமைப்பு குறித்த குழுக் கலந்துரையாடலொன்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சட்டக் கல்வித் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக் கலந்துரையாடலில் இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் திரு. வினோத் கே. ஜேக்கப் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் சட்டக் கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர் தீபிகா உடகம ஆகியோர் சிறப்புப் பேச்சாளர்களாக பங்கேற்றனர். அதனைத் தொடர்ந்து, கெட்டம்பே ராஜோபவனாராமவில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்ட இந்திய பிரதி உயர்ஸ்தானிகர், வணக்கத்திற்குரிய கெப்பிட்டியாகொட ஶ்ரீ விமல தேரரிடம் E-நெனசலவிற்க்குத் தேவையான கணினிகளை கையளித்தார். இதன்போது இந்தியா வழங்கிய உதவிக்காக வணக்கத்துக்குரிய தேரர் தனது நன்றியை தெரிவித்தார்.

***

கண்டி
26.11.2022